# SCIENCE EXPRESS – BIO DIVERSITY SPECIAL
# BRIEF NOTE – TAMIL

சுற்றுச்சூழல் மற்றும் வன இலக்கா மற்றும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞானத்துறையின் அரசாங்க கூட்டுறவு முயற்சி 'அறிவியல் எக்ஸ்ப்ரஸ் - பையோடைவர்சிடி ஸ்பெஷல்' பல்லுயிர்களையும் தட்பவெப்ப மாறுநிலையையும் மையமாகக் கொண்ட இந்த அறிய அறிவியல் கண்காட்சி 16 குளிர்சாதனப் பெட்டிகள் உள்ள இரயில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த இரயில் உலக சுற்றுச்சூழா் தினமான ஏப்ரல் மாதம் 9ஆம் நாள் 2013ல் தில்லி ஸப்தர் ஜங் ஜங்ஷனிலிருந்து மதிப்பிற்குறிய தில்லியின் முதலமைச்சர் மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் வன இலாக்கா மற்றும் இரயில் இலாக்கா அமைச்சர்களால் துவக்கப்பட்டது.

இம்முறை இந்த அறிவியில் எக்ஸ்ப்ரஸ் 9 ஏப்ரலில் இருந்து அக்டோபர் 28, 2013 வரை 62 ஊர்களில் நடைபெறவிருக்கிறது. ஒவ்வொரு ஊரிலும் 3 முதல் 4 நாட்கள் வரை பொது மக்களின் பார்வைக்காக குறிப்பிட்ட நேரத்தில் திறந்தே இருக்கும்.

அக்டோபர் 2007ல் முதலாம் முறை துவங்கியதிலிருந்து இந்த இரயில் இந்தியா முழுவதும் 95000 கி.மீ கடந்திருக்கிறது. இப்பயணத்தின் 305 நிறுத்தங்கள் 1111 கண்காட்சி நாட்களில் 94 இலட்சத்திற்கும் மேலான பொது மக்கள் இக்கண்காட்சியை கண்டு மகிழ்ந்துள்ளனர். இந்தியாவிலேயே மிகப்பெரிய மற்றும் மிக அதிகமாக பொதுமக்கள் பார்க்க வரும் ஒரே நடமாடும் அறிவியல் கண்காட்சியாக இந்த அறிவியல் எக்ஸ்பரஸ் திகழ்கிறது.

இந்த நடப்பு பத்தாண்டுகளும் உலக நாடுகளால் (UN) பல்லுயிர் தசாப்தம் (A Decade of Biodversity) மற்றும் பாலைவனம் மற்றும் பாலைவனப்படுதல் எதிர்ப்பு தசாப்தமாக அறிவிக்கப்பட்டிருக்கினறது. அக்டோபர் 2012ஆம் வருடத்தில ஹைதராபாத்தில் பல்லுயிர் மரபின் பதினோராவது உறுப்பினர்கள் மாநாடு (CoP11 to Covention of Biological Diversity) நமது நாட்டால் நடத்தப்பட்டது. இது நம் நாட்டின் உயிரின வகைகள் மற்றும் அதை பாதுகாக்க நாம் எடுத்திருக்கும் நடவடிக்கைளைப் பற்றி காண்பிக்க ஒரு அறிய வாய்ப்பாக அமைந்தது. ஆதலால் அறிவியல் விரைவுவண்டி உயிரினங்களின் வகைகளை மையமாகக் கொண்டுள்ளது.

பலவகையான பார்வையாளர்கள், முக்கியமாக மாணவர்களையும், ஆசிரியர்களையும் குறிவைத்து இந்த அதி நவீன கண்காட்சி, நம் நாட்டின் உயிரின வகைகள் மற்றும் தட்ப வெட்ப மாறுதல்களும் அதையொற்ற இடுவுகளைப் பற்றியும் விழிப்புணர்வு பறப்ப செயல்படுகிறது.

எஸ்.இ.பி.எஸ்.ஸில் உள்ள 16 பெட்டிகளில், 8 சுற்றுச்சூழல் மற்றும் வன இலாக்காவால் ஆதரிக்கப்பட்டுள்ளது. இவை முழுக்க முழுக்க நம் நாட்டிலுள்ள ஆழகான, பலவகையான உயிரினங்களை வெவ்வேறு புவியியல் பகுதிகளாக வர்ணக்கின்றன. இவை டிரான்ஸ் ஹிமாலயாஸ் மற்றும் ஹிமாலாயாஸ், கங்கைப் பரவுநிலம், வட கிழக்கு இந்தியா, பாலைவனம் மற்றும் புனசெய் பகுதிகள், மேற்கு மலைகள், டெக்கன் தீவகற்பம், மற்றும் கடலோரப் பகுதி மற்றும் தீவுகள். இக்காண்காட்சியில் உயிரினங்களின் பாதுகாப்பு மட்டும் அன்றி கடல் வாழ் உயிரினங்கள், கடற்களை காடு, நுண்ணுயிர்கள் விவசாய

உயிர் வகைகள் மற்றும் நம் வாழ்க்கையை ஒற்றி இவற்றின் சம்பந்தங்களைப் பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளது.

ஒரு பெட்டி HSBCஆல் ஆதரிக்கப்பட்டு தட்பவெட்பமாறுநிலை பல்லுயிர் வகைகள் மற்றும் தண்ணீரைப் பற்றியும், மற்றொன்று ஸ்விஸ் எம்பஸ்ஸி மற்றும் (UL India) ஆல் தொகுக்கப்பட்டு பசுமைப்புட்சி மற்றும் தட்பவெட்ப மாறுநிலை பற்றியும் காட்சி அமைக்கப்பட்டுள்ளன. அடுத்த பெட்டி பி.சி.ஆர்.எ (PCRA)வால் ஆதரிக்கப்பட்டு எரிபொருள் பாதுகாப்பை மையமாக கொண்டுள்ளது. மற்றொரு பெட்டியில் சிறுவர்கள் பகுதியாக்கப்பட்டு அதில் சிறுவர்கள் விளையாட்டுப் போல் சோதனை செய்யவும், விளையாடவும் அறிவு பூர்வமான கணக்கு, புதிர்கள் மற்றும் விஞ்ஞானம் சம்பந்தமானவையாகும். ஒரு பிரத்தியயேகமான பெட்டியில் பிரபலமான வி.எ.எஸ்.சி.எஸ்.சி.யின் 'ஜாய் ஆப் சைன்ஸ்' சோதனைக்கூடம் இயன்று வருகிறது. இந்த அற்புதமான சோதனைக்கூடத்தில் மாணவர்கள் வந்து அறிவியல், சுற்றுக்சூழல் மற்றும் பல்லுயிர் வகைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்து புரிந்து கொள்ள வாய்ப்பளிக்கப்படுகின்றனர். இது இண்டஸ் டவர்ஸால் ஆதரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பெட்டியில் ஆசிரியர்கள் அறிவியல் மற்றும் சுற்றுச்சூழலைப் பற்றி ஆழ்ந்து கலந்துரையாட மற்றும் அவர்களின் செயல் திறன்களை மெறுகேற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

ஒரு ரயில் பெட்டியில் ஆசிரியர்களின் பயிற்சிக்காவும் வசதி செய்யப்பட்டுள்ளது. அரசின் கல்விப் பிரிவு மற்றும் பள்ளிகள், ஆசிரியர்களை பயிற்சி எடுக்க ஊக்குவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். முன்பதிவிற்கும் மற்றும் விளக்கங்களுக்கும் ரயில்பெட்டியில் உள்ள அதிகாரியை அணுகி விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒவ்வொரு நிறுத்தத்திலும் அனைத்து வயதினரையும் ஸ்வாரஸ்யபடுத்த மற்றும் அறிவியல் விரைவு வண்டியின் நோக்கத்தை வற்புறுத்தும் வகையாக பல விதமான ஸ்வாரஸ்யமான விளையாட்டுகளும், செயல்பாடுகளும் நடத்தப்படுகின்றன. அக்கப்பக்கப் பள்ளிக்கூடங்களில் அறிவியல் விரைவு வண்டியிலிருந்து 'அவுட் ரீச் ப்ரோகிராம்' நடத்தப்படுகிறது. ஒரு பள்ளியின் அனைத்து மாணவர்களுக்கும் மிக ஸ்வாரஸ்யமான முறையில் அறிவியல், கணிதம் சுற்றுக்சூழல் மற்றும் பல்லுயிர் வகைகளைப் பற்றி கற்பிக்கப்படுகிறது. இதை தேசிய சுற்றுக்சூழல் விழிப்புணர்வு முகாம் மற்றும் தேசிய பசுமைப்படை ஆதரிக்கின்றன.

நமது நாட்டின் பல்லுயிர் வகைகளின் முக்கியத்துவம் மற்றும் அதை பாதுகாக்கும் விதிமுறைகளை நாடெங்கும் பரவ உதவும் முறையாக அமைந்துள்ள இந்த அறிவியல் விரைவு வண்டியில் உள்ள அனைத்து காட்சிப் பொருட்களும் அறிவுப் அறிவுப் பங்குதாரர்களின் அறிவையும் திறமையையும் கடின உழைப்பயும் எடுத்துக்காட்டுகிறது. இக்கண்காட்சியை தொகுத்து, வகைப்படுத்தி, வடிவமைத்திருப்பது வி.எ.எஸ்.சி.எஸ்.சி, சி.கு.இ. (சென்டர் ஆப் என்விரான்மெண்ட் எடுகேஷன்). இக்கண்காட்சியை முழுமையாக ஊக்குவித்தும் ஆதரித்தும் வருவது அறிவியல் மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞானத்துறை மற்றும் சுற்றுச்சூழர் மற்றும் வன இலாகா, எச்.எஸ்.பி.சி, யூ.எல்.இந்தியா மற்றும் இண்டஸ் டவர்ஸ் இக்கண்காட்சியின் சில பகுதிகளை ஆதரித்திருக்கிறார்கள்.

எஸ்.இ.பி.எஸ்.ன் மூலம் இந்தியா முழுவதும் பயன்படும் பொருட்டு அதை வழிநடத்திச் செல்லும் பொறுப்பை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞானத்துறை, வி.ஏ.எஸ்.சி.எஸ்.சி.யிடம் வழங்கியுள்ளது. வி.ஏ.எஸ்.சி.எஸ்.சி.யின் தகுந்த படிப்பறிவுடைய பயிற்சி பெற்ற மேலும் திறமை மிக்க அறிவியல் தொகுப்பாளர்கள் இந்த இரயிலிலேயே பயணித்து இக்கண்ணாட்சியை காணவரும் பொது மக்களுக்கு காட்சிப் பொருள்களை விவரித்து அவர்களின் சந்தேகங்களை நீக்கி, வெளியில் காத்து நிற்கும் மக்களுக்கு பல்லுயிர் வகைகளின் சம்பந்தமான சில பல செயல்களையும் செய்வித்து பள்ளி மாணவர்கள் மற்றும் பொது மக்களின் அறிவியல் அறிவுத்திறனை மேம்படுத்துகின்றார்கள்.

எல்லோரும் வந்து பார்க்கக்கூடிய இக்கண்காட்சி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன்பெறும் நோக்கத்தில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் விவரங்களுக்கு www.scienceexpress.in என்ற இணையதளத்துக்கு செல்லவும்.

கண்காட்சிக்கு வர அல்லது ஏதேனும் விவரங்கள் அவசியமாயின் scienceexpress@gmail.com க்கு இமெயில் செய்யவும் அல்லது பணித்திட்ட அதிகாரியை (09428405407) தொடர்பு கொள்ளுங்கள். 25 மாணவர்கள் வரை கொண்ட குழுகளாக பிறிக்கப்பட்டு மாணவர்கள் 'ஜாய் ஆஃப் சயின்ஸ்' சோதனைக்கூடத்தில் முன்பதிவு செய்து பங்கு பெறலாம். இதில் பங்குபெற சோதனைக்கூட பொருப்பாளரை அணுகவும் (09428405408) அல்லது vascsc.jobs@gmail.com க்கு இமெயில் செய்யவும்.

இத்தகையை மேன்மையான நடமாடும் அறிவியல் கண்காட்சியை வெற்றிகரமாக தான் மேற்கொண்ட பணியை செய்யும் பொருட்டும், பெருவாரியான மக்கள் அதன் பயனை அடையும் பொருட்டும், பற்பல பொது நிறுவனங்களும், தனியார்களும் பள்ளி நிறுவனங்களும், செய்தித்தாள், தொலைக்காட்சி போன்ற ஊடகங்களும் இக்கண்காட்சியின் பயன்களை பொதுமக்களுக்கு அறிவித்து ஒத்துழைக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறது.

குறிப்பு:

1. இந்த கண்காட்சிக்கு எல்லோரும் அனுமதிக்கப்படுவார்கள். அனுமதிக்குக் கட்டணம் எதுவும் இல்லை.
2. இந்த கண்காட்சிக்கு வருபவர்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் பொருட்களை உள்ளே எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.

   கைபேசி, காமெரா, பைகள், வத்திக்குச்சி பெட்டிகள், சிகரெட், பீடி, புகையிலை, சில திரவங்கள், கூரியதுடை உள்ள பொருட்கள்.

3. இடம் : ரெயில்வே ஸ்டேஷன்
4. நேரம் : காலை 10 மணி முதல் மாலை 5.00 மணி வரை
5. தேதி, இடம் விவரங்களை அட்டவனையைப் பார்த்து தெரிந்துக் கொள்ளவும்.
6. கண்காட்சிக்கு வருபவர்கள் நீண்ட வரிசையில் நிற்க வேண்டியிருப்பதால், தொப்பி மற்றும் குடி தண்ணீர் எடுத்து வரவும்.